# மனோதத்துவப் பின்னணியில் சுந்தரகாண்டம்

**Lalitha Sitaraman**
*Manager,*
*Information Technology Department,*
*Central Office*



இராமாயணமும் மஹாபாரதமும் இந்து மத நூல்களாக இருந்தாலும் அவை இந்திய நாட்டின் கலாச்சாரச் கருவூலங்களாகப் பார்க்கப்பட வேண்டும் என்று அறிஞர்கள் கூறுவார்கள். அக் கருத்தை ஒட்டி மதக்கோட்பாடுகளைத் தாண்டி இக் கட்டுரை முயற்சிக்கப்பட்டிருக்கிறது. இராமாயணத்தின் சுந்தரகாண்டத்தைத் தினசரி படிப்பதால் துன்பங்கள் நீங்கி நன்மை பெருகும் என்பது ஒரு நம்பிக்கை. இது நம்பிக்கை மட்டுமல்ல, இதற்கு மனோதத்துவப் பின்னணியும் இருக்கிறது என்பதை சுந்தர காண்டத்தை இரசித்துப் படிக்கும்போது அறியமுடியும். வானமும் முழுநிலவும், மலைகளும், அருவிகளும், குளங்களும் ஓடைகளும், சோலைகளும் மரங்களும், மலர்களும் என இயற்கையின் வருணனைகள் கொடுக்கும் மன அமைதியும், தனக்கு ஏற்பட்ட இன்னல்களைச் சிறிதும் பொருட்படுத்தாமல் எடுத்துக் கொண்ட செயலைத் திறமையாக உற்சாகத்துடன் செய்து முடித்த அனுமன் என்ற தன்னலம் இல்லாத தொண்டனின் புத்தி கூர்மையும் செயல்வீரமும் நமக்குள்ளே எழுப்பும் ஆக்கபூர்வமான சிந்தனைகளும் (positive thoughts) ஒரு உயரிய அனுபவம் கொடுக்கின்றன. சுந்தரகாண்டத்தின் 14 படலங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் அனுமன் வீர சௌந்தர்யம், பக்தி சௌந்தர்யம், புலனடக்க சௌந்தர்யம் மூன்றும் மிளிரும் சுந்தரனாகக் காட்சியளிப்பதாலும் பிராட்டி தவ சௌந்தர்யம் நிறைந்தவளாக காணப்படுவதாலும் இக்காண்டம் சுந்தர காண்டம் என்று பெயர் பெறுவதற்கு அனுமனும் பிராட்டியும் முறையே காரணமாவதாக பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் இராமவதாரத்தின் (கம்ப இராமாயணம்) சுந்தரகாண்டத்தின் உரைக்குத் தாம் அளித்திருக்கும் முன்னுரையில் கூறியிருக்கிறார். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என நான் சுந்தர காண்டத்திலிருந்து சேகரித்திருக்கும் சில பகுதிகளை இங்கு பகிர்ந்து கொள்கிறேன். இவற்றில் இயற்கை வருணனைகளும் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பெறும் நன்னெறிகளும் பெரும்பாலும் மேற்கோள்களாகவே கொடுக்கப்பட்டிருக்கின்றன. கம்பராமாயணமான இராம காதையிலிருந்து பெரும்பாலான மேற்கோள்களும் (நன்றிஃ இராமாவதாரத்திற்கு கம்பன் அறநிலை உரை, நமது வங்கியின் நூல் நிலையம்) அதன் மூலமாக வால்மீகி இராமாயணத்திலிருந்து சில வருணணைகளும் கருத்துகளும் (நன்றிஃ அமரர் உபன்யாசகர் சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதரின் சுந்தரகாண்டப் பொருளுரை) இடம் பெற்றிருக்கின்றன.

அனுமன் கடலைத் தாண்டும் போது கடலிலிருந்து வெளிப்பட்ட ஆயிரம் சிகரங்களை உடைய மைநாகமலைக்கு அதன் அருவித் திரள்கள் மேலாடை போலிருக்கின்றன என 'மீ ஓங்கு செம்பொன் முடி ஆயிரம் மின் இமைப்ப, ஓயா அருவித் திறள் உத்தரியத்தை ஒப்ப,' என்னும் வரிகள் (இராம காதை - பாடல் 4780) வருணிக்கின்றன. மந்தார மலர்கள் நிரம்பிய சோலை வெளிப்படுத்திய மலர்த்தாதுக்கள் மணக்கின்ற வாடைக் காற்றை பாடல் 4813 'தென்றல் விருந்து செய்ய' எனவும் பாடல் 4814 'மந்தாரம் உந்து மகரந்தம் மணந்த வாடை' எனவும் வருணிக்கின்றன. வால்மீகி இராமாயணம், கடல் அரசன் மைநாகத்திடம் 'முன்பு அனுமனின் தந்தை நமக்கு உதவியிருக்கிறார். நாம் செய்ய வேண்டியதை தவறவிடக்கூடாது. செய்ய வேண்டியதைச் செய்யாமற்போனால் சான்றோர்களுக்குக் கோபம் உண்டாகும்,' என்று கூறி அனுமனுக்கு உதவுமாறு வேண்டிக்கொண்டதாக கூறுகிறது. மைநாகம் அனுமனிடம் 'உபகாரத்திற்குப் பதில் உபகாரம் செய்வது வேதத்தில் கூறிய தர்மமாகும்... பெரியோர்களை வணங்கவேண்டுமென்பது மூவுலகிலும் பிரசித்தி பெற்றது... விருந்தினர் கல்வியற்றவராயினும் தர்மமறிந்தவரால் வணங்கத்தக்கவர். அப்படி இருக்க உன்போன்ற அறிவாளிகள் வணங்கத்தக்கவர் என்பதில் சந்தேகமென்ன?' என்று கூறுகிறது. சிம்ஹிகை என்னும் அரக்கியை அனுமன் வென்றதை வருணிக்கும் போது அந்த வெற்றியை இராமகாதை பாடல் 4825 'ஆர்த்தனர்கள் வானவர்கள் -' என விவரிப்பதை வால்மீகி இராமாயணத்தில் 'அனுமனே! எவனொருவனிடத்தில் துணிச்சல், வரப்போவதை யோசிக்கும் தன்மை, ஆலோசிக்கும் வல்லமை, கார்யத்தை நன்கு நிறைவேற்றும் சாமர்த்தியம் ஆகிய இந்நான்கும் இருக்கின்றனவோ அவன் தான் செய்யும் கார்யத்தில் குறையை அடையமாட்டான்!' என்று வானவர் வாழ்த்துவதாகக் காண்கிறோம். வால்மீகி இராமாயணத்தில் 3வது சர்க்கத்தில் லங்காதேவதை அனுமனிடம் 'காட்டில் குடியிருக்கும் குரங்கே, நீ யார், எதற்காக இங்கு வந்தாய்?' என்று கேட்டதற்கு அனுமன் 'இலங்கா நகரத்தையும் இங்குள்ள திண்ணை, மதிற்சுவர்கள், வாசல் பாகங்கள் இவைகளையும் பார்ப்பதற்காகவே இங்கு வந்தேன். இதில் எனக்கு மிகவும் ஆசையிருக்கிறது. பயிர் செய்யப்பட்ட காடுகளையும், இயற்கையான காடுகளையும் அரண்மனைச் சுற்றுப்புறமுள்ள பூந்தோட்டங்களையும், இலங்கையின் நாற்புறமிருக்கும் வீடுகளையும் பார்ப்பதற்காகவே நான் இங்கு வந்தேன். இப் பட்டினத்தைப் பார்த்துவிட்டு வந்தபடியே திரும்பி விடுகிறேன்.' என்று விஸா நேர்முகப்பேட்டி (Visa Interview) போல பதில் கூறுகிறார்.

'மெய்ம்மணி மாடமூதூர்' எனவும் 'பொன் நகர்' எனவும் இராமகாதையில் குறிப்பிடப்படும் இலங்கை நகரின் வளம் கீழ்வரும் பலபாடல்களில் வருணிக்கப்படுகிறது.

பாடல் 4833 ஃ 'வேண்டிய வேண்டின் எய்தி, வெறுப்பு இன்றி விழைந்து துய்க்கும் ஈண்ட அரும்போக இன்பம் ஈறு இலது' (முடிவில்லாத இன்பத்தை உடையது என வருணிக்கப்படுகிறது).

பாடல் 4839 ஃ 'நான் நான்மலர்க் கற்பக நறுவிரை' (கற்பக மலர்களின் நறுமணம் குறிப்பிடப்படுகிறது).

பாடல் 4843 ஃ 'மரம் அடங்கலும் கற்பகம்; மனை எலாம் கனகம்' (மரங்களில் கற்பக மலர்கள், மனைகளில் பொன் நிறைந்திருக்கின்றன).

பாடல் 4851 ஃ 'தேனும் சாந்தமும் மான்மதச் செறிநறுஞ் சேறும் வான நாள்மலர்க் கற்பக மலர்களும் வயமாத் தான வாரியும்

நீரொடு மடுத்தலின், தழீஇய மீனும் தானும் ஓர் வெறிமனம் கமழும் அவ்வேலை'.

தேன், சந்தனம், வானிலுள்ள நட்சத்திரங்களைப் போல மலர்ந்த கற்பகப் பூக்கள் முதலிய பொருள்கள் நதியின் நீருடன் வந்து கலப்பதால் கடலும் அதில் வாழும் மீன்களும் ஒப்பற்ற தெய்வ மணம் பெறுவதாக இப்பாடல் கூறுகிறது.

சந்திரோதயத்தின் அழகு 4888-4889 பாடல்களில் காட்சியாக்கப்படுகிறது.

குளிர்ந்த வெள்ளிய முழுநிலவு கடலில் உள்ள வெண்மையான அலைகள் வெண்சாமரையைப்போல சுற்றுப் பக்கத்தில் இருந்து சுழன்று சுழன்று அசையப் பொலிவு பெற்று விளங்கிற்று. இதில் சந்திரனாகிய குடத்தினாலே அலைகள் மடங்கி மடங்கி எழுகின்ற பாற்கடலையே முகந்தெடுத்து கொட்டியது எனக் கூறும்படி வெண்மையான நிலாவெளிச்சம் மலைப்புறத்திலும் தரைப்புறத்திலும் நட்சத்திரங்களுடன் பரவிற்று.

இலங்கையில் அனுமன் தேவதாரு, கோங்கு, பேரீச்சை, நன்கு மலர்ந்த முரளி, எலுமிச்சை, மலை மல்லிகை, தாழை, வாசனைமிக்க ப்ரியங்கு, கடம்பம், ஏழிலைப்பாலை, மருதை, பலவகைகளான மலர்களால் நிரம்பியதும், மொட்டுக்களுள்ளதும், பறவைகளால் சூழப்பட்டதும், காற்றாலசைக்கப்பட்ட நுனியை உடையதுகளுமான மரங்களையும், அன்னம், நீர்க்காகம் இவைகளால் சூழப்பட்டதும், செந்தாமரை நீலோத்பலம் இவைகளோடு கூடியதுமான ஓடைகளையும், அழகிய பலவித விளையாடுமிடங்களையும், பலவகைப்பட்டதும், எல்லாப் பருவங்களிலுமுள்ள மலர், பழம் இவைகளோடு கூடிய பலவித மரங்களால் சூழப்பட்டதுமான குளங்களையும், அழகிய தோட்டங்களையும் கண்டார் என வால்மீகி இராமாயணத்தின் 2வது சர்க்கம் கூறுகிறது.

வால்மீகி இராமாயணத்தின் 9வது சர்க்கத்தில் காணப்படும் புஷ்பக விமான வருணனை குறிப்பிடத் தக்கது. தங்கமயமானவைகளும் ஸ்படிகக்கல் வைத்து புதைக்கப் பட்டவைகளுமான சுவற்றிற்கு மேல் பாகத்தில் அலங்காரத்துக்காக அமைக்கப்பட்ட சிறு ஜன்னல்களோடும் கீழ்பாகத்தில் காற்றிற்காக அமைக்கப்பட்ட பெரிய ஜன்னல்களோடும் கூடியதும், சிறிதும் பெரிதுமான சிறந்த இந்திர நீலக்கற்களால் செய்யப்பட்ட மேடைகளை உடையதும், பலவிதமான பவழத்தாலும் விலையுயர்ந்த மணிகளாலும் ஒப்பற்ற முத்துக்களாலும் செய்யப்பட்ட தளவரிசையால் ஒளிவீசுகிறதும், உருக்கிய தங்கத்துக்கு ஒப்பானதும், சிவந்ததும், சிறந்த வாசனையோடு கூடியதுமான சந்தனத்துடன் கூடியதும் பாலசூரியனுக்கு ஒப்பானதும், மிகச்சிறந்த உருவத்துடன் கூடிய மேல்மாடிகளால் நன்கு அலங்கரிக்கப்பட்டதுமான புஷ்பகமெனும் விமானம் என வருணிக்கப்படுகிறது.

கள் உறையும் மலர்ச்சோலை என்றும் மணிமலர்ச் சோலை என்றும் கம்பராமாயணத்தில் வருணிக்கப்படும் அசோக வனத்தின் அழகு வால்மீகி இராமாயணத்தில் விரிவாக வருணிக்கப்படுகிறது. எழுந்து மேலே செல்லும் பறவைக்கூட்டங்களின் இறக்கைகளால் அடிக்கப்பட்ட மரங்கள் பல நிறமுற்ற பல வகையான பூமழையைப் பொழிந்தது. மரங்களிலிருந்து விழுந்த பலவிதமான மலர்களால் நிரம்பிய பூமியானது ஒளி வீசியது. அனுமன் அங்கு ரத்னக்கற்களால் தளவரிசை செய்யப்பட்ட இடங்களையும், தங்கத்தால் பதிக்கப்பட்ட இடங்களையும் பலவித உருவமுள்ளதுகளும் சிறந்த நீர் நிரம்பியதும் ஆங்காங்கு சிறந்த மணிகளால் கட்டப்பட்ட படிக்கட்டுகளுடன் கூடியதுகளும் முத்துக்கள் பவழங்கள் இவைகளாகிய மணல்களை உடையதுகளும் கரையில் முளைத்த தங்கமயமான மரங்களால் ஒளிவீசுபவைகளும், தாமரை, நீலோத்பலம் இவற்றின் குவியலை உடையதுகளும் சக்ரவாகப்பறவைகள் மற்றும் குருவிகள், அன்னம் போன்ற பறவைகளின் ஒலிகளால் நிரம்பியதுகளும் நீண்டதுகளும் மரங்களோடு கூடியதுகளும் அமிர்தத்திற்கு ஒப்பான நீரை உடையதுகளும் தூய்மையான ஆறுகளால் நாலாபக்கத்தில் பெருக்கெடுத்து ஓடும்படி செய்யப்பட்டவைகளும் பலவித கொடிகளால் சூழ்ந்ததுகளும் கற்பகமரத்தின் பூக்கள் நிறைந்ததும் பலவிதமான புதர்களால் நெருக்கமாகச் சூழப்பட்டவைகளும் அலரிப்பூக்களால் செய்யப்பட்ட இடைவெளியை உடையவைகளுமான குளங்களையும் பார்க்கிறார். அங்கு இருந்த மரங்கள் யாவும் மலர்களும் பழங்களும் நிறைந்து குடையின் உருவம் போல் தழைந்து இருந்தன. நுனியில் பூத்ததும், அழகியதும், அழகிய முளை, துளிர் இவற்றை உடையதும் இலைகள் நிறைந்திருப்பவைகளும் காற்றினால் வீசப்பட்டதும் அநேக சதங்கைகளின் ஒலிகளை உடையதுமான சிம்சுபா மரங்களாலும், சம்பகம், சந்தனம், தாழை, புன்னை மற்றும் பல்வேறு மரங்களாலும் அசோகவனம் நிரம்பியிருந்தது. மலர்ந்த அசோக மரங்களின் ஒளி சூரிய உதயத்தின் ஒளியை ஒத்திருந்தது. பூத்த கொன்றை மரங்களாலும் நன்கு பூத்த புரச மரங்களாலும் அந்த இடம் நாலாபக்கங்களிலும் ஒளி வீசியது.

12வது சர்க்கத்தில் அனுமன் உற்சாகத்தை விடுவது கெடுதலென்று நினைத்து உற்சாகத்தை அடைய வேண்டி அதைப் புகழ்ந்து பேசுகிறார். 'புலன்களை தன் தனது கார்யங்களில் நன்கு ஈடுபடுத்துவது உற்சாகமாகும். எல்லா கார்யங்களிலும் எப்பொழுதும் ஏவுவது உற்சாகமல்லவா? மனிதர்கள் செய்யும் யாதொரு கார்யமுண்டோ அதைப்பயனுள்ளதாகச் செய்வது உற்சாகமே ஆகும். ஆகையால் உற்சாகத்தால் செய்யக்கூடிய சிறந்த முயற்சியை நான் ஆரம்பிக்கிறேன்', எனத் தன்னைத்தானே உற்சாகப் படுத்திக் கொள்கிறார்.

அனுமன் அசோகவனத்தை அடைந்து மேல் செய்ய வேண்டியதை ஆலோசிக்கிறார். அவர் எப்பொழுதும் தான் செய்யும் கார்யத்தை முன்னதாகவே மனதால் ஒருமுறை யோசிப்பது வழக்கம். அதனால் செயலை ஆரம்பிப்பவர்கள் முன்னதாகவே ஒரு முறை மனத்தால் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்பது கருத்து என்று வால்மீகி இராமாயண 13வது சர்க்கம் உரைக்கிறது.

வால்மீகி இராமாயணத்தின் 16வது சர்க்கம் : பெரியோர்களிடத்தில் வணக்கமுள்ள இலட்சுமணனுக்கு பூஜிக்கத்தக்கவளும் ஸ்ரீராமனுடைய மனைவியுமான சீதையும் பீடிக்கப்பட்டாளாகில் காலகதியை ஒருவரும் மீற முடியாது என்பதற்கு வேறு என்ன சாட்சி வேண்டும். தர்மமறிந்தவனும் செய்நன்றி உள்ளவனும் ஆத்மசக்தி வாய்ந்தவனுமான ஸ்ரீராமனுடைய மனைவியான இந்த சீதை அரக்கிகளுக்கு வசப்பட்டிருக்கிறாள். இது காலத்தின் செயலேயாகும். முன்வினைப்பயனைக் கொடுக்கும் காலமும் கடவுளுடைய வடிவமேயாகும்.

பாடல் 5055ல் அனுமன் இராவணனைத் தானே கொன்று விடலாமா என நினைத்துப் பிறகு சினம் நெகிழ்ந்து ஆராய்ந்து 'ஒன்று ஊக்கி ஒன்று இழைத்தல் உணர்வு உடைமைக்கு உரித்து அன்றால்' (ஒரு செயலைச் செய்யத் துவங்கி வேறு செயலைச் செய்வது அறிவுடைய செயலாகாது) என உணர்கிறார்.

'மரணத்தால் துக்கம் விலகாது. விவேக ஞானத்தால்தான் துக்கம் விலகும் என்று எண்ணி அம்மாதிரி ஞானம் பெற்று துக்கத்தை விட்ட பெரியோர்களை வணங்குகிறாள். மஹாத்மாக்களும் தியான சீலர்களும் பாபத்தை விலக்கிக்கொண்டவர்களும் பாபச்செயலைத் தூண்டும் மனது, புலன்கள் இவைகளை வென்றவர்களுமான விருப்பு வெறுப்பற்ற அந்தப் பெரியவர்களை வணங்குகிறேன்.' என்று சீதை ஞானிகளை வணங்கிய உடனேயே நன்மைகள் நடக்கத் தொடங்கி விட்டன என்று வால்மீகி இராமாயணத்தின் 26வது சர்க்கம் கூறுகிறது.

34வது சர்க்கம் : கஷ்டம் வந்த போது அதைப் பொறுத்துக்கொண்டு நூறு வருஷமானாலும் ஜீவித்திருந்தால் கஷ்டம் நீங்கி ஆனந்தம் உண்டாகுமென்று உலகத்தில் சொல்லும் பழமொழியானது சத்தியமான பொருள் உள்ளதே என்று சீதைக்குத் தோன்றுகிறது.

37வது சர்க்கம் : தெய்வமானது கயிற்றினால் கட்டியிழுப்பது போல் ஏராளமான செல்வத்திலும் பயங்கரமான துக்கத்திலும் அவரவர்களுடைய முன்வினைக்குத் தகுந்தபடி இழுத்து அமரும்படிச் செய்கிறது.

40வது சர்க்கம் : செய்யவேண்டிய குறிப்பிட்ட காரியத்தில் முன்பு செய்த காரியத்திற்கு விரோதமில்லாமல் பல காரியங்களை எவன் முடிக்கிறானோ அவனே காரியம் செய்வதற்குத் திறமையுள்ளவனாவான். சிறிய முயற்சியால் பலவித காரியத்தை எவன் செய்து முடிக்கிறானோ அவனே பயனைத்தரும் காரியத்தை செய்வதில் சக்தியுள்ளவனாவான்.

பிராட்டியின் துயர் அகற்ற இராமசரிதம்தான் ஏற்ற மருந்து எனத் தீர்மானித்து அதைக் கூறிப் பிராட்டிக்கு நம்பிக்கை ஏற்படுத்திய பிறகு இராமபிரான் கொடுத்தனுப்பிய திருவாழியைப் பிராட்டியிடம் கொடுக்கிறார்.

பாடல் 5417 : 'நீ இடரும் ஐயமும் சங்கையும் நீங்குதி; தனிமை நீங்குவாய்.' அனுமனின் மொழி கேட்டு சீதை மனம் தெளிவதை 'ஆக இம் மொழி ஆசு இல கேட்டு, அறிவுற்றாள்; ஓகை கொண்டு களிக்கும் மனத்தள், உயர்ந்தாள்;' எனப் பாடல் 5419 கூறுகிறது.

இராவணனுடன் இராமதூதன் என்ற முறையில் பேசிப்பார்க்கவும் அவனுடைய வலிமையைத் தெரிந்து கொள்ளவும் நினைத்த அனுமனின் புத்தி கூர்மையை " 'சிறு தொழில் முடித்து அகல்தல் தீது' எனல் தெரிந்தான்; மறித்தும் ஓர் செயற்கு உரிய காரியம் மதித்தான்." எனப் பாடல் 5429 கூறுகிறது. இராவணன் தன்னுடைய வீரர்களையும் பஞ்ச சேனாதிபதிகளையும் மைந்தர்களையும் போருக்கு அனுப்பிய போது 'ஆர்த்தனர்; ஆயிரம் ஆயிரம் அம்பால் தூர்த்தனர்; அஞ்சனை தோன்றலும் நின்றான்' (பாடல் 5648) எனச் சிறிதும் சோர்வோ வருத்தமோ அடையாமல் அனைவரின் அம்புகளையும் தாங்கிக் கொண்டு நிற்கும் அனுமனின் தன்னலமில்லாத தியாகம் நமக்குப் புத்துணர்ச்சி ஊட்டுகிறது. அனுமன் எல்லோரையும் வென்றதை 'வானையும் வன்றுளோரை வல்லையின் மடிய நூறி, ஏனையர் இன்மை, சோம்பி இருந்தது, அக் குரங்கும்' எனப் பாடல் 5667 கூறும்போது 'அறன் விழவில்லை' என நாமும் நம்பிக்கை கொள்கிறோம்.

51வது சர்க்கம் : 'ஓ மஹா புத்திமானே, நீங்கள் தர்மத்தின் பயனைத் தெரிந்து கொண்டவர். தவத்தினால் எல்லா நன்மைகளையும் அடைந்தவர். ஆகையால் பிறருடைய மனைவியைப் பிடித்து சிறையில் வைத்திருப்பது நீங்கள் செய்யக்கூடிய காரியமல்ல. உன் போன்ற அறிவாளிகள் தர்மத்திற்கு விரோதமானதும் பல கெடுதல்களைக் கொடுக்கக்கூடியதும் குடும்பத்தின் வேரை அறுக்கிறதுமான காரியங்களில் ஈடுபடுவதில்லை அல்லவா?... தர்மத்தின் பயனான சுகமானது அதர்மத்தின் பயனான துக்கத்துடன் சேர்ந்து வருவதில்லை. தர்மத்தின் பயனே தனியாக வரும். தர்மமே அதர்மத்தை நாசம் செய்யும். தர்மம் அதர்மத்தைப் போக்குமே அல்லாமல் அதர்மம் தர்மத்தைப் போக்காது.' என்று அனுமன் இராவணனுக்கு புத்தி கூறுகிறார். ஆனால் இராவணன் இந்த நல்லுரைகளை ஏற்றுக்கொள்ளாமல் அனுமனைக் கொல்லும்படி உத்தரவிடுகிறான்

52வது சர்க்கம் : கடமையைச் செய்ய வேண்டியது நிச்சயம் என்ற எண்ணம் கொண்ட விபீஷணர் செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றி யோசித்தார். 'ஓ வீர, பிராணிகளுள் தாங்களே தர்மமறிந்தவர். செய்நன்றியுள்ளவர். ராஜ தர்மத்தில் நிபுணர். எல்லாவற்றையும் அறிந்தவர். வாஸ்தவத்தையும் உணர்ந்தவர். தங்களைப் போன்ற வித்வான்கள் கூட கோபத்திற்கு வசமானார்களேயானால் சாஸ்த்ரம் படித்தது வீணாகிவிடும்.' என்று இராவணனுக்கு தூதனான அனுமனைக் கொல்வது தவறு எனப் பலவிதமாக எடுத்துக் கூறி தர்மத்தை நிலை நிறுத்துகிறார்.

55வது சர்க்கம் : தனது வாலில் இட்ட தீயால் அசோகவனத்தைக் கொளுத்திய பிறகு அனுமன் வருத்தப்படுகிறார். 'எவர்கள் தன்னையறியாமல் வரும் கோபத்தை விவேக ஞானத்தால் எரிகின்ற நெருப்பை நீரால் போல் தடுக்கின்றனரோ அப்படிப்பட்ட பெரியோர்களே பிறவியைப் பயனுடன் கூடியதாய்ச் செய்து கொண்டவர்கள்........... மிகக் கோபம் கொண்டவர் ஒருபொழுதும் பேசத்தகுந்தது பேசத்தகாதது என்று அறிய மாட்டார்கள். எவனொருவன் சீறிவருகின்ற கோபத்தை பொறுமையினால், ஜீரணமான தோலை பாம்பு போல், விட்டுவிடுகிறானோ அவனே மானுடனென்று சொல்லப்படுகிறான்.' என்று சீதை இருந்த அசோகவனத்தை முன்யோசனையின்றிக் கொளுத்தியதற்காகத் தன்னையே நொந்து கொள்கிறார். ஆனால் அங்கு அனுமன் நடத்தியது அறப்போராட்டமாதலால் அசோகவனம் முழுவதும் அழிந்தும் சீதை இருந்த இடத்திற்கு மட்டும் எந்த சேதமும் ஏற்படவில்லை. பிராட்டியைக் கண்டதை இராமபிரானிடம் அனுமன் கூறுவதைப் பின்வரும் பாடல்கள் விவரிக்கின்றன:

பாடல் 6031 : 'கண்டனென், கற்பினுக்கு அணியை, கண்களால்'

பாடல் 6051 : 'உன் மலரடி சென்னி வைத்தாள்'

பாடல் 6052 : 'வைத்தபின், துகிலன் வைத்த மாமணிக்கு
அரசை வாங்கி, கைத்தலத்து இனிதின்
ஈந்தாள்; தாமரைக் கண்கள் ஆர, வித்தக!
காண்டி! என்று, கொடுத்தனன் - வேத நல்
நூல் உய்த்துள காலம் எல்லாம் புகழொடும்
ஒக்க நிற்பான்.'

ஆக சுந்தர காண்டத்தைப் படித்து முடித்தவுடன் ஒரு மலை வாசஸ்தலத்திற்கு விடுமுறை சென்று வந்ததைப் போலவும் பௌர்ணமி நிலவில் கடற்கரையில் இருந்துவிட்டு வந்ததைப் போலவும் உற்சாகமும் செயல்திறனும் மென்மையான மனமும் படைத்த ஒரு தன்னலமில்லாத தொண்டனுடன் நாமும் கூடவே இருந்து பயிற்சிபெற (on the job training) முயற்சித்தது போலவும் உணர்கிறோம்.